மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Paper Manuscript in Early Aganaanooru Edition History

Dr. T. Athithan

Associate Professor, Department of Rare Paper Manuscripts, Tamil University, Thanjavur, India

Manuscript ID : **MT223A0123**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 10.02.2023
Revised: 18.03.2023
Accepted: 23.03.2023
Published: 25.03.2023

Pages : 113-117

DOI: 10.5281/zenodo.7768942

ABSTRACT:

Historical evidences include inscriptions, copper plates, coins, palm leaf manuscripts and paper manuscripts. Many literary, grammatical, mathematical, medical, astronomical and historical works handed down to us by our forefathers are also present in paper trails. These are also primary sources of evidence in the field. In that sense, the role of paper traces is also primary in the edition history of Aganaanooru, one of the Sangam literatures. Considering the scope of the research, this article examines the editions that came before 1940 and highlights the utility of paper manuscripts in them.

KEYWORDS:

Paper manuscripts, Aganaanooru edition, Edition history, First edition, Source and text

தொடக்கக்கால அகநானூறு பதிப்பு வரலாற்றில் காகிதச் சுவடி

முனைவர். த. ஆதித்தன்,
இணைப்பேராசிரியர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

வரலாற்றுச் சான்றாதாரங்களுள் கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள், ஓலைச் சுவடிகள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கன காகிதச் சுவடிகள். நம் முன்னோர்கள் நமக்குத் தந்து சென்றுள்ள இலக்கிய, இலக்கண, சோதிட, மருத்துவ, வானியல், வரலாற்றுப் படைப்புகள் பலவும் காகிதச் சுவடிகளில் இடம்பெற்றுள்ளன. இவை ஆய்வுலகில் முதன்மை சான்றாதாரங்களாகவும் உள்ளன. அந்த வகையில் சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானூற்றின் பதிப்பு வரலாற்றிலும் காகிதச் சுவடிகளின் பங்கு முதன்மையானதாகும். ஆய்வு எல்லையினைக் கருதி தொடக்கக்காலமாக 1940க்கு முன்னர் வந்த பதிப்புகளை ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றில் காகிதச் சுவடிகள் பதிப்பிற்குப் பயன்பட்டுள்ளமையை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

காகிதச் சுவடி, அகநானூறு பதிப்பு, பதிப்பு வரலாறு, முதல் பதிப்பு, மூலமும் உரையும்

முன்னுரை

ஆய்வுலகில் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள் போன்ற வரலாற்று சான்றாதாரங்களோடு வைத்து எண்ணத்தக்கன காகிதச் சுவடிகள். காகிதச் சுவடிகள் அண்மைக்கால சான்றாதாரங்கள். முதலில் குறிப்பிடப்பட்டன பண்டைய சான்றாதாரங்கள். இக்காகிதச் சுவடிகள் பதிப்புலகில் முதன்மை இடம் பெறுகின்றன. அவ்வகையில் அகநானூற்றுப் பதிப்பில் ஓலைச் சுவடிகள் மட்டுமல்லாது காகிதச் சுவடிகளும் பயன்பட்டுள்ளன. அதற்குச் சான்றாகத் தொடக்கக் கால அகநானூறு பதிப்பில் காகிதச் சுவடி பெறும் இடம் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. ஆய்வு எல்லையாக 1940க்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டவை மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அகநானூறு

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றிற்குச் சிறப்புகள் பல உண்டு. பல அக இலக்கியங்கள் இருந்தாலும் அகம் என்றால் அகநானூற்றையே குறிக்கும். நெடுந்தொகை நானூறு, நெடுந்தொகை, பெருந்தொகை நானூறு, அகப்பாட்டு என்னும் பெயர்களாலும் இந்நூல் குறிக்கப்பட்டுள்ளன. 400 பாடல்களின் தொகுப்பான 13 முதல் 31 அடி வரையிலான பாடல்களை உடையதாகும். மதுரை உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன்னால் தொகுக்கப்பெற்ற இந்நூலினைத் தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரபெருவழுதி. பழமை வாய்ந்த இவ்விலக்கியத்தைப் பலர் பதிப்பித்துள்ளனர். அவர்களுள் முதன்மையானவராக வே. இராசகோபாலையங்காரைக் குறிப்பிடலாம்.

முதல் பதிப்பு

பதிப்பு வரலாற்றில் முதல் பதிப்பு எப்பொழுது வெளிவந்தது? யாரால் வெளியிடப்பெற்றது என்பது குறித்து அதிகம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நூலாக அகநானூற்றினைக் குறிப்பிடலாம். இந்நூலின் முதல் பதிப்பாசிரியராக வே. இராசகோபாலையங்காரரையே பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட நிலையில் தமிழண்ணல், **"அகநானூற்றின் முதல் பதிப்பாசிரியர் வே. இராஜகோபாலாச்சாரியார் ஆவார். இவர் 70 பாடல்களுக்கு (1-70) மட்டும் உரையெழுதியுள்ளார்."**[1] என்கிறார். பதிப்பித்த ஆண்டு குறித்த பதிவையும் இவர் வெளிப்படுத்தவில்லை. அதேநேரம் அகநானூற்றின் முதல் பதிப்பு கி.பி.1904இல் வெளிவந்ததாகக் குறிப்பிடும் ரா. இளங்கோவன், இப்பதிப்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளிவந்ததாகும். இதனை ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு பழைய உரையுடன் ஆராய்நது வெளியிட்ட அறிஞர் இரா. இராகவையங்கார் என்கிறார். இங்கு தமிழண்ணல், இரா. இளங்குமரன் ஆகியோரின் கருத்துகள் ஆய்வுக்குரியனவாகும்.

இரா. இளங்குமரன் அகநானூற்றில் முதல் பதிப்பாசிரியர் இரா. இராகவையங்கார் எனவும் தமிழண்ணல் வே. இராஜகோபாலாச்சாரியார் எனவும் குறிப்பிடுவது குறித்து சி. இலட்சுமணன் அவர்கள், **"தமிழண்ணல் அவர்கள் வே. இராஜகோபாலையங்காரை வே. இராஜகோபாலாச்சாரியார் ஆக்கிவிட்டார்"**[2] என்கிறார். பதிப்பாண்டு குறித்த இளங்குமரனாரின் கருத்திலும் மயக்கம் உள்ளது. இதனை, இப்பதிப்பு 1904ஆம் ஆண்டே பதிப்பிடப்பெற்றதாயினும் 1951ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றதென்று அதன் முகப்பட்டையால் புலப்படுகின்றது என்பதால் அறியலாம்.

“இ. சுந்தரமூர்த்தி அவர்கள் சங்க நூல்கள் முதன் முதலில் அச்சான விவரங்களைத் தொகுத்து கூறுமிடத்து அகநானூறு ரா. இராகவையங்கார் அவர்களால் 1918இல் பதிப்பிக்கப் பெற்றது”[3] என்கிறார். இவ்வாறு பல்வேறு அறிஞர்களும் அகநானூறு பதிப்பு குறித்த தகவல்களைப் பதிவுச் செய்துள்ளனர்.

அகநானூற்றுப் பதிப்பு வரலாற்றில் 1923

அகநானூறு மூலமும் உரையுமாக முழுமையாக வெளிவந்த ஆண்டாகப் பல அறிஞர்கள் சொல்வது கி.பி. 1923ஆம் ஆண்டைத்தான் பெ. சுயம்பு அவர்கள், **“வே. இராசகோபால ஐங்கார் இதனை முதலில் (1923) பதிப்பித்தார். அகநானூறு மூலமும் உரையும் முதற் பகுதியை 1918இலும் இரண்டாம் பகுதியை 1920லும் உ.வே.ரா. இராசவையங்கார் பதிப்பித்தார்”**[4] என்கிறார்.

இரா. இளங்குமரன் **“1923இல் அகநானூறு மூலமும் உரையுமாக வெளியிடப்பட்டுள்ளது. இதனைக் கம்பர் விலாசம் வே. இராசகோபாலையங்கார் பதிப்பித்தார்”**[5] என்கிறார். இங்கு கம்பர் விலாசம் என்பது அவருக்கான சிறப்பு அடைமொழியாகும். வே. இராசகோபாலையங்கார் கம்பர் மேல் அதீத அன்பும் பற்றும் கொண்டிருந்திருக்கிறார். அவர் கட்டிய வீட்டிற்கு, கம்பர் விலாசம் என்று பெயரிட்டிருப்பதே அதனை வெளிப்படுத்தும். இத்தகைய அவரின் பற்றின் காரணமாகவே கம்பர் விலாசம் வே. இராசகோபாலையங்கார் என்று அனைவராலும் அழைக்கப்பட்டிருக்கிறார். இவர் முழுமையான அகநானூற்றுப் பதிப்பினை உரையோடு 1923இல் பதிப்பித்துள்ள செய்தியினைச் ‘சுவடிப் பதிப்பியல் வரலாறு’ நூலில் இரா. இளங்குமரன் தெளிவுப் படுத்தியிருக்கிறார். மேலும் வே. இராசகோபாலையங்கார் அவர்களின் முகவுரை மூலம் பதிப்பிற்கு 8 சுவடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதனையும் அறியமுடிகிறது. அவை, பொ. பாண்டித்துரை தேவர் உதவிய சுவடி, சென்னை கீழ்த்திசை சுவடி, நிலையச் சுவடி, தேவர்பிரான் கவிராயர் சுவடி, திருநெல்வேலி நெல்லையப்பக்கவிராயர் சுவடி, தி.த. கனசுந்தரம் பிள்ளை ஓலைச்சுவடி ஒன்றும் காகிதச் சுவடி ஒன்றும், கா.ரா. நமச்சிவாய முதலியார் சுவடி, திருமயிலை சண்முகம் பிள்ளை சுவடி என்பனவாகும்.

இவற்றுள் தி.த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களிடம் இருந்து பெற்ற இரண்டு சுவடிகளில் ஒன்று காகிதச் சுவடி என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது. இதன் மூலம் ஒப்புமை ஆய்வுக்குக் காகிதச் சுவடி பயன்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது.

தொடர்ந்து ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, புலியூர்கேசிகன், மர்ரே எஸ். இராஜம், பொ.வே. சோமசுந்தரம் ஆகியோரும் அகநானூற்றுப் பதிப்பில் கவனம் செலுத்தியுள்ளனர்.

1943 முதல் 1970 வரையிலான அகநானூறு பதிப்புகளும் தொடக்கக்காலப் பதிப்புகளாகக் கொள்ள வேண்டியனவே. அவ்வகையில் ந.மு. வேங்கடசாமி நாட்டார், வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் இணைந்து 1943இல் அகநானூறு-களிற்றுயானை நிரையைத் தமிழ் வெளியீட்டுக் கழகப் பதிப்பாக வெளியிட்டுள்ளனர். அவ்விருவரும் 1944இல் அகநானூறு-மணிமிடைப்பவளம், அகநானூறு-நித்திலக்கோவை ஆகியவற்றைத் தனிப்பதிப்புகளாகப் பதிப்பித்துள்ளனர்.

மர்ரே இராஜம் அவர்கள் 1958இல் அகநானூற்றுக்கு மூல பாடப் பதிப்பினைக் கொண்டுவந்துள்ளார். 1960இல் புலியூர் கேசிகன் அகநானூறு-களிற்றியானை நிரை மணிமிடைப்பவளம் ஆகியவற்றையும் 1961இல் நித்திலக் கோவையையும் பதிப்பித்துள்ளார். இவை சென்னை பாரிநிலைய வெளியீடாக வந்ததுள்ளன. 1970இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் அகநானூற்றுக்கு ஒரு பதிப்பினைக் கொண்டுவந்துள்ளது. அதன் பதிப்பாசிரியரும், உரையாசிரியருமாகத் திகழ்பவர் பொ.வே.சோமசுந்தரனார். தொடர்ந்து இன்றுவரை பல நிறுவனங்களாலும் ஆசிரியர்களாலும் பல பதிப்புகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

மொத்தத்தில் தொடக்கக்கால அகநானூற்றுப் பதிப்பு வரலாற்றில் வே. இராசகோபாலையங்காரின் 1923ஆம் ஆண்டு பதிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

தொகுப்புரை

- வரலாற்றாய்வுக்கு உதவும் கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள், ஓலைச்சுவடிகள் போன்று காகிதச் சுவடிகளும் போற்றத்தக்கன.
- கி.பி. 1904ஆம் ஆண்டு முதல் அகநானூற்றுப் பதிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் அவை முழுமையடைந்த பதிப்புகளாக இல்லை.
- முதல் முழுமையான அகநானூற்றுப் பதிப்பானது 1923இல் வந்துள்ளது.
- முதல் அகநானூற்றுப் பதிப்பினைக் கொண்டு வந்தவர் வே. இராசகோபாலையங்கார்.
- முதல் பதிப்பில் தி.க. கனக சுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் காகிதச் சுவடிகள் பதிப்புலகில் பெறும் முதன்மையினை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. தமிழண்ணல். *தமிழ் இலக்கிய வரலாறு*. மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், ப.82, 1986.
2. இரா, இளங்குமரன். *சுவடிப் பதிப்பியல் வரலாறு*. சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், ப.229, 2001.
3. இ, சுந்தரமூர்த்தி. *பதிப்பியல் சிந்தனைகள்*. சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், ப.66, 2019.
4. பெ, சுயம்பு. *தமிழ் இலக்கிய வரலாறு*. திசையனிவிளை, பாரதி பதிப்பகம், ப.93, 2021.
5. இரா, இளங்குமரன். *சுவடிப் பதிப்பியல் வரலாறு*. சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், ப.231, 2001.

REFERENCES

1. Thamizhannal. Thamizh ilakkiya varalaru. Madurai, Meenakshi puththaga nilaiyam, P.82, 1986.
2. R, Elankumaran. Suvati pathippiyal varalaru. Chidambaram, Manikkavasakar pathippakam, P.229, 2001.
3. E, Sundaramoorthi. Pathippiyal sinthanaigal, Chennai, Newcentury bookhouse, P.66, 2019.
4. P, Suyambu. Ilakkiya Varalaru, Thisaiyanivilai, Bharathi pathippakam, P.93, 2021.
5. R, Elankimaran. Suvati pathippiyal varalaru, Chidambaram, Manikkavasakar pathippakam, P.231, 2001.